# ஆதி கால வரலாறு

பாடம் 3

## இழந்து கண்டறியப்பட்ட பரதீசு

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

இலக்கிய அமைப்பு ........ 2

கண்ணோட்டம் ........ 2

தோட்டத்தினுள் ........ 2

மேம்படுத்தப்பட்ட நிலை ........ 2

சபிக்கப்பட்ட நிலை ........ 3

தோட்டத்திற்கு வெளியே ........ 3

ஒற்றுமை ........ 4

துவக்கமும் முடிவும் ........ 4

நடுப் பகுதிகள் ........ 5

உண்மையான அர்த்தம் ........ 7

தோட்டம் ........ 8

அடையாளம் ........ 8

பரிசுத்தம் ........ 11

உண்மைத்தன்மை ........ 14

ஏதேனில் ........ 15

கானானில் ........ 15

விளைவுகள் ........ 18

மரணம் ........ 18

வேதனை ........ 19

விலக்குதல் ........ 21

நவீன பயன்பாடு ........ 22

தொடக்கம் ........ 23

பவுல் ........ 23

மத்தேயு ........ 25

தொடர்ச்சி ........ 27

பவுல் ........ 27

யாக்கோபு ........ 27

ராஜ்யத்தின் நிறைவு ........ 29

ரோமர் ........ 29

வெளிப்படுத்தின விசேஷம் ........ 29

முடிவுரை ........ 31





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

எல்லோரும் ஏதாவது ஒரு வேளையில் எதையாவது இழக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு வேளை அது ஒரு புத்தகமாக இருக்கலாம். அல்லது அது உங்கள் வீட்டுச் சாவியாக இருக்கலாம். உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் அதைப்போன்று ஒன்றை இழந்துவிட்டால் நான் செய்யும் முதல் காரியம் என் நிலைகளைத் திரும்பப் பெறுவதாகும். என் எண்ணத்தில், நான் இழந்த பொருளை எங்கே வைத்தேன் என்று நினைவுகூர படிப்படியாக கடந்த காலத்திற்குச் செல்வேன். பின்னர், என் நிலைகளைத் திரும்பப் பெற்றவுடன், நான் தவறு செய்ததை கவனமாக மாற்றியமைக்கிறேன். சாவிகள் மேஜை மீது எங்கு இருக்க வேண்டுமோ அங்கே வைக்கிறேன், புத்தகம் அலமாரிக்குத் திரும்பப் போகிறது. நான் இழந்த ஒன்றைக் கண்டுபிடிக்க எனக்குத் தெரிந்த சிறந்த வழிகளில் ஒன்று நான் செய்ததைத் திரும்பப் பெறுவது மற்றும் மாற்றியமைப்பது ஆகும்.

இப்பாடத்திற்கு "இழந்து கண்டறியப்பட்ட பரதீசு" என்று பெயரிட்டுள்ளோம். ஆதியாகமம் 2:4–3:24 இல், ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளின் பாவம் குறித்த சம்பவத்திற்கு நேராய் நம் கவனத்தைச் செலுத்துவோம். இஸ்ரவேல் மக்களை ஊக்குவிப்பதற்காக பரதீசை இழந்த ஆதாம் மற்றும் ஏவாள் அந்தத் தோட்டத்தில் திருப்பி மாற்றியமைத்த நடவடிக்கைகளைப் பற்றி மோசே எழுதியதை நாம் பார்ப்போம். இந்தச் சம்பவத்தின் மூலம் இழந்த பரதீசைத் திரும்பப் பெற நம்பிக்கையுண்டு என்று இஸ்ரவேல் அறிந்துகொண்டதைப்போல, மோசே இஸ்ரவேலுக்கு அளித்த ஊக்கமே இன்று நமக்கும் தேவன் தரும் செய்தி என்று பார்ப்போம். ஆதாம் மற்றும் ஏவாள் எடுத்த நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் இன்று கிறிஸ்தவர்களும் பரதீசைக் கண்டு கொள்ள முடியும். ஆதியாகமம் 2 மற்றும் 3 பற்றிய நமது ஆய்வு மூன்று பகுதிகளாகப் பிரிகிறது: முதலாவதாக, இந்தப் பத்தியின் இலக்கிய அமைப்பை நாம் ஆராய்வோம். இரண்டாவதாக, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு அவற்றை ஏன் இவ்வாறு எழுதினார் என்பதை அறிய இந்த அத்தியாயங்களின் உண்மையான அர்த்தத்தில் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, நம் வாழ்வில் இந்தப் பத்தியின் சரியான பயன்பாட்டிற்கு புதிய ஏற்பாடு எவ்வாறு வழிகாட்டுகிறது என்று கேட்பதன் மூலம் நவீன பயன்பாட்டிற்கு நேராக நம் கவனத்தைத் திருப்புவோம். இந்தப் பத்தியின் இலக்கிய அமைப்பிலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இலக்கிய அமைப்பு

ஆதியாகமம் 2–3 ஒரு நீண்ட பத்தியாக இருந்து பல தலைப்புகளைத் தொட்டாலும், அது உண்மையில் ஒரு ஒருங்கிணைந்த விளக்கத்தை உருவாக்குகிறது. இந்தப் பத்தியைச் சரியாகப் புரிந்து கொள்ள, நாம் இந்த இரண்டு அதிகாரங்களையும் ஒரே இலக்கியப் பகுதியாகக் கருதி கவனம் செலுத்த வேண்டும். ஆதியாகமம் 2–3 இல் உள்ள இலக்கிய கட்டமைப்பைப் பற்றிய நமது ஆய்வு இரண்டு முக்கிய விஷயங்களைக் கொண்டிருக்கும்: முதலாவதாக, இந்தப் பத்தியின் முக்கிய பிரிவுகளின் கண்ணோட்டத்தைப் பெற முடியும்; இரண்டாவதாக, இந்தப் பல்வேறு பிரிவுகளில் சில குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைப் பற்றி நம் கருத்தைத் தெரிவித்து, அதனால் மோசே இஸ்ரவேலிடம் என்ன சொல்ல விரும்பினார் என்னும் அவரது எண்ணத்தை நாம் புரிந்துகொள்ளலாம். ஆதியாகமம் 2–3 இன் இலக்கியக் கட்டமைப்புக் கண்ணோட்டத்துடன் நாம் ஆரம்பிக்கலாம்.

## கண்ணோட்டம்

2:4 இன் முதல் பாதியில் தோன்றும் சுருக்கமான தலைப்பைத் தவிர, இந்த இரண்டு அதிகாரங்களும் நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, தலைப்புகள் மற்றும் குணாதிசயங்களில் அடிப்படையாக ஏற்படும் மாற்றங்களால் குறிக்கப்படுகின்றன. நாம் இந்த நான்கு நிலைகள் வழியாகச் சென்று அவற்றின் அடிப்படைக் கருத்தைச் சுருக்கமாகக் கூற வேண்டும்.

### தோட்டத்தினுள்

இந்த சம்பவத்தின் முதல் வியத்தகு நிலை 2:4-17 இல் தோன்றுகிறது. தேவன் அங்கு ஆதாமை ஏதேன் தோட்டத்தில் வைத்தார் என்று வாசிக்கிறோம். இந்த வசனங்கள் ஏதேன் தோட்டத்தின் பரந்து விரிந்த காட்சியுடன் தொடங்கி, இந்த வேத பகுதி நமக்குச் சொல்வது போல், முழுத் தோட்டமும் ஆதாம் வசிக்க மற்றும் வேலை செய்ய அருமையான இடமாக இருந்தது. பின்பு இந்தப் பிரிவின் கவனம் ஆதாமின் சிருஷ்டிப்பு மற்றும் தோட்டத்திற்குள் அவன் வேலை செய்வதற்கான கட்டளையைக் குறிக்கிறது. தேவனுடைய கிருபையால் ஆதாமுக்கு ஒரு பெரும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டது. தேவனின் சார்பாக அவன் தோட்டத்தைப் பராமரிக்க வேண்டியிருந்தது.

### மேம்படுத்தப்பட்ட நிலை

நம்முடைய இந்த சம்பவத்தின் இரண்டாம் நிலை 2:18-25 யைக் கொண்டுள்ள மனுக்குலத்தின் ”மேம்படுத்தப்பட்ட நிலை” என்று குறிப்பிடுவோம். இதில் தேவன் இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதாமின் வாழ்க்கையில் சேர்த்தார். 2:18 இல் காணப்படும் ஒரு புதிய பிரச்சனையை அறிமுகப்படுத்தி இந்தப் பகுதி ஆரம்பிக்கிறது. அங்கே, தேவன் ஆதாமைப் பார்த்து இந்த வார்த்தைகளைக் கூறினார்:

> மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் (ஆதியாகமம் 2:18).

2:18-25 இல் உள்ள ஏனைய வசன பகுதி தேவன் இப்பிரச்சனையை எவ்வாறு கையாண்டார் என்று அறிவிக்கிறது. ஆதாம் மிருகங்களின் மத்தியில் ஒரு துணையைத் தேடினான். ஆனால் இறுதியில், ஒரு மனுஷியை தேவன் உருவாக்கி அவளை ஆதாமிடத்திற்குக் கொண்டு வந்தார். இந்தப்பிரகாரமாக, தேவன் ஆதாம் ஏவாளுக்கு ஏற்கனவே அற்புதமாக உண்டாக்கியிருந்த சிருஷ்டியை மேம்படுத்தினார்.

## சபிக்கப்பட்ட நிலை

இந்த சம்வத்தின் மூன்றாம் நிலையை 3:1-21 இல் உள்ள மனுக்குலத்தின் "சபிக்கப்பட்ட நிலை" என்று நாம் அழைப்போம். இது 3:1 இல் ஒரு புதிய தலைப்பையும், வஞ்சிக்கும் சர்ப்பம் என்னும் புதிய கதாபாத்திரத்தையும் அறிமுகப்படுத்தி ஆரம்பிக்கிறது. இந்த இடத்திலிருந்து 3:1-21 சர்ப்பத்தின் வஞ்சனையையும் அதினால் ஏற்பட்ட விளைவுகளையும் கையாள்கிறது. ஏவாள் சர்ப்பத்தின் வஞ்சனையில் விழுந்து அவளும் ஆதாமும் விலக்கப்பட்ட கனியைப் புசித்து தேவ சாபங்களுக்கு ஆளாகிறார்கள்.

## தோட்டத்திற்கு வெளியே

இந்த வேத பகுதியின் முக்கிய கட்டமைப்பில் உள்ள நான்காவது மூலப்பொருள் 3:22-24 ஆகும், இதற்கு "தோட்டத்திற்கு வெளியே" உள்ள மனுக்குலம் என்று பெயரிட்டுள்ளோம். இந்தப் பிரிவு தலைப்பிலிருந்து வேறுபடும் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றத்தால் குறிக்கப்படுகிறது. இங்கே தேவன் ஜீவவிருட்சத்தின் சிக்கலைப் பற்றிப் பேசுவதைப் பார்க்கிறோம். 3:22 இல் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> மனுஷன் ... தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் (ஆதியாகமம் 3:22).

இந்த மரத்திலிருந்து ஆதாம் புசித்தால் ஏற்படக்கூடிய பிரச்சனையைச் சமாளிக்க, தேவன் ஆதாமைத் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டு, அதற்குப் போகும் வழியைக் காவல்செய்ய கேரூபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற ஒரு சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார். அதிலிருந்து, தேவனின் நேரடியாகத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தலையிட்டால் ஒழிய மனிதர்களுக்கு இனி ஏதேன் தோட்டத்திற்குச் செல்ல வழி கிடையாது.

## ஒற்றுமை

இந்த வேத பகுதியில் வரும் நான்கு பெரும் பிரிவுகளை மனதில் கொண்டு, ஆதியாகமம் 2–3 காட்டும் வியத்தகு ஒற்றுமையை நாம் இப்போது உற்று நோக்கலாம். இந்தப் பிரிவுகளில் உள்ள வெவ்வேறு கூறுகளை இணைப்பதின் மூலம், மோசே தனது விவரிப்பின் முக்கிய கருத்துக்களை வெளிப்படுத்தினார். இந்த சம்பவத்தில் உள்ள ஒற்றுமைகளை மேலும் ஆராய, முதலில் இச்சம்பவத்தின் ஆரம்பம் மற்றும் முடிவில் காணப்படும் சமநிலையைப் பார்த்த பின்னர், இரண்டு நடுப்பகுதியில் காணப்படும் ஒற்றுமையைக் காண்போம். நாம் முதலில் இந்த வேத பகுதியின் ஆரம்பம் மற்றும் முடிவைக் காண்போம்.

### துவக்கமும் முடிவும்

நாம் பார்ப்பது போல ஆதியாகமம் 2:4-17 மற்றும் 3:22-24 தங்களுக்குள் குறைந்தது மூன்று முக்கிய வழிகளில் முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றன.

முதல் வேறுபாடு இருப்பிடத்தில் இருக்கிறது. இதன் விவரம் 2:7 இல் தேவன் ஆதாமை பரதீசாகிய தோட்டத்தினுள் வைப்பதிலிருந்து தொடங்குகிறது. தெய்வீக ஆசீர்வாதங்கள் நிரம்பிய ஒர் இடத்தில் ஆதாம் வாழ்ந்து வேலை செய்தான். எப்பக்கத்திலும் அற்புதமான தாவரங்கள், ஜீவன் தரும் தண்ணீர், விலையேறப்பெற்ற உலோகங்கள் மற்றும் கற்கள் அவனைச் சூழ்ந்திருந்தன. இதற்கு மாறாக, இந்த நிகழ்வானது 3:24 இல் தேவன் ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலிருந்து வெளியேற்றியதில் முடிகிறது. இந்தப் புவியியல் வேறுபாடு மனிதர்கள் பூமியில் வசிக்க மிகவும் விரும்பத்தக்க இடம் ஏதேன் தோட்டத்தில் இருந்தது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

ஒவ்வொரு பிரிவிலும் கவனம் செலுத்தும்போது காணப்படும் இரண்டாவது வித்தியாசம் தோட்டத்திலுள்ள சிறப்பான மரங்கள் ஆகும். 2:4-17 ஜீவவிருட்சம், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் என்னும் இரண்டு மரங்களைப் பற்றிப் பேசினாலும், 2:17 யை வாசிக்கும் போது நம் கவனம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் என்கிற ஒரு மரத்திற்கு மட்டும் செல்கிறது. இந்த மரம் மனிதர்களுக்கு நன்மை மற்றும் தீமை பற்றிய அனுபவ அறிவைக் கொடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தது. முன்பு பார்த்திராத காரியங்களைப் பார்க்கும்படி அது அவர்கள் கண்களைத் திறக்கக்கூடியதாய் இருந்தது.

இதற்கு மாறாக, 3:22-24 இன் இறுதியில் தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தைப் பற்றிக் கவலைப்படாமல், ஜீவவிருட்சத்தைப் பற்றி மட்டும் பிரத்தியேகமாய் அக்கறை கொண்டார். இந்த மரம் மனிதர்களுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நித்திய ஜீவனைத் தரும் வல்லமையைப் பெற்றிருந்தது. ஆனால் தேவன் ஆதாமை விரட்டிவிட்டு இந்த மரத்தை அணுகவிடாமல் தடுத்தார். தேவன் வேறுவகையில் கட்டளையிடும் பட்சத்தில், ஒரு காலத்தில் தோட்டத்திற்குள் சுதந்திரமாகப் போகக்கூடிய அனுமதி மற்றும் அங்குள்ள ஆசீர்வாதங்கள் அனைத்தும் தொலைந்து போயிருந்தது என்பதை இந்த வேறுபாடு தெளிவுபடுத்துகிறது.

இந்தச் சம்பவத்தின் தொடக்கத்திற்கும் முடிவிற்கும் இடையிலான மூன்றாவது வேறுபாடு மனுக்குலத்திற்கு இடப்பட்ட கட்டளையில் உள்ளது. தேவன் ஆதாமை வேதனை மற்றும் கஷ்டமில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்ட தோட்டத்தைப் பண்படுத்த வைத்தார் என்பதை 2:15 இல் உள்ள முதல் படி அறிவிக்கிறது. ஆனால் 3:23 இல் தேவன் ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலிருந்து விரட்டிவிட்டு தோட்டத்திற்கு வெளியே கஷ்டப்படும்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். இந்த வேறுபாடு இச்சம்பவத்தில் ஒரு அவசியமான கண்ணோட்டத்தையும் தருகிறது. ஏதேனின் அற்புதமான வாழ்க்கையை மனுக்குலம் இழந்தது மட்டுமன்றி, தோட்டத்தைவிட்டு வெளியில் இருக்கும் வரையில் நாம் கஷ்டப்படும்படி ஆக்கினைக்குட்படுத்தப்பட்டிருக்கிறோம்.

ஆதியாகமம் 2–3 இல் உள்ள ஆரம்ப மற்றும் முடிவுப் பகுதிகளில் காணப்படும் இந்த மூன்று முரண்பாடுகள் இந்த சம்பவத்தின் மிக முக்கியமான சில அம்சங்களுக்கு நேராக நம் கவனத்தை ஈர்க்கின்றன. ஆதி காலத்தில் மனித நிலையில் நிகழ்ந்த ஒரு பெரும் மாற்றத்தைப் பற்றி மோசே எழுதினார். தேவன் ஆதியில் மனுக்குலம் அவரின் தோட்டத்தில் வாசம் செய்யும்படி கட்டளையிட்டார். ஆனால் ஆதாம் ஏவாளின் பாவம் ஜீவவிருட்சத்திலிருந்து அவர்களைப் பிரித்து, கஷ்டத்திற்கும் தொல்லைக்கும் உள்ளாக்கியது. இப்போது நாம் பார்க்கிறபடி, இந்த முரண்பாடுகளின் தொகுப்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராய் மோசே இஸ்ரவேல் ஜனங்களை நடத்திய போது தங்கள் சூழ்நிலையை உணர்த்துவதாகக் கண்டார்கள். எகிப்தின் அடிமைத்தனத்தில் கொடுமையை அனுபவிக்கும்படிக்கு இஸ்ரவேலர்கள் ஏதேனை விட்டுத் தூரம் போயிருந்தார்கள். ஏதேனில் தேவன் அருளியிருந்த ஆசீர்வாதங்களை அவர்கள் மீண்டும் பெற வேண்டியிருந்தது.

## நடுப் பகுதிகள்

கதையின் வெளிப்புறப் பகுதிகளின் மாறுபட்ட ஒற்றுமைகளை மனதில் கொண்டு, நம் கவனத்தை கதையின் நடுத்தர பகுதிகளான 2:18-25 மற்றும் 3:1-21 க்கு நேராக செலுத்த வேண்டும். இந்த இரண்டு உள் நிலைகள் தொடக்கத்திற்கும் முடிவிற்கும் இடையிலான இடைவெளியை நிரப்பி, குறைந்தபட்சம் மூன்று வழிகளில் தங்கள் சொந்த மாறுபடும் ஒற்றுமைகளை உருவாக்குகின்றன. ஒரு வேறுபாடு தேவனுக்கும் மனுக்குலத்திற்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இடையிலான உறவில் கவனம் செலுத்துகிறது. இரண்டாவது நிலையில் ஆதாமிற்கும் தேவனுக்கும் இடையிலான இணக்கமான உறவைக் காண்கிறோம். 2:18 இல் தேவன் ஆதாம் மீது கரிசனை கொண்டு அவனுக்கு ஏவாள் என்னும் ஏற்ற துணையைக் கொடுத்தார். இங்குள்ள காட்சி தேவனும் மனுக்குலமும் நெருங்கி சமாதானத்துடன் இருப்பதாகும். ஆயினும் இந்த வேத பகுதியின் மூன்றாம் பகுதியில் தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையிலான ஆரம்ப இணக்கத்தை ஒற்றுமையின்மை மாற்றுகிறது. ஆதாமும் ஏவாளும் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் 3:8 இல் தேவ அணுகுமுறையிலிருந்து மறைந்தனர். தேவன் ஆதாமிற்கும் ஏவாளுக்கும் எதிராகக் கோபமாகப் பேசினார்.

இரண்டாவது வேறுபாடு மனித உறவுகளுக்கிடையில் உள்ளது. 2:18-25 இல் உள்ள இரண்டாம் நிலையில் ஆதாமும் ஏவாளும் பூரண சந்தோஷத்தில் இருந்தனர். ஆதாம் ஏவாளைக் குறித்து ”என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய்” என்று வேதத்தின் முதல் நேசப்பாடலை 2:23 இல் வெளியிட்டான். அவர்கள் நிர்வாணிகளாய் ஒன்றாய் இருந்தும் வெட்கப்படாமல் வாழ்ந்தார்கள். ஆனால் மாறாக 3:16 இல் தேவன் இந்த உறவைச் சபித்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் பகை உண்டாகும் என்று அறிவித்தார். ஸ்திரீயின் ஆசை அவள் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் அவளை ஆண்டுகொள்ளுவான். ஆதாம் ஏவாளின் பாவமானது தேவனுடனான அவர்கள் உறவை மட்டுமல்ல அவர்கள் இருவருக்கிடையில் உள்ள உறவையும் கெடுத்துப்போட்டது என இந்த வார்த்தைகள் வெளிப்படுத்தியது. அவ்விடம் தொடங்கி மனித உறவுகள் கஷ்டம் மற்றும் போராட்டத்தால் குறிப்பிடப்படுகின்றன.

மூன்றாவது வேறுபாடு தீமையுடனான மனுக்குலத்தின் உறவில் காணப்படுகிறது. இரண்டாம் நிலையில் இந்தக் கதையில் தீமை காணப்படவில்லை. ஆதாம் மற்றும் ஏவாள் முற்றிலும் குற்றமில்லாதவர்களாய் தீமையின் வல்லமையிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் மூன்றாம் நிலையில் மனுக்குலம் சர்ப்பத்தின் வலையில் விழுந்து தீமையுடனான நீண்டதொரு போராட்டத்திற்குள் அடைக்கப்பட்டார்கள். தேவன் 3:15 இல் ஏவாளின் வித்து ஒரு நாள் சர்ப்பத்தை மேற்கொள்ளும் என்று வாக்களித்தார். ஆனால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உடனடி வெற்றி கொடுக்கப்படவில்லை.

இந்த சம்பவத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் பகுதிகளுக்கிடையில் உள்ள முரண்பாடுகள் மோசேக்கு இதை எழுதும்போது இருந்த பல அக்கறைகளைக் காண நமக்கு உதவுகிறது. மோசே ஆதாமையும் ஏவாளையும் பற்றி இஸ்ரவேல் மக்களின் அனுபவத்துடன் சம்பந்தப்படுத்தும் விதத்தில் எழுதினார். பாவம் இஸ்ரவேலரின் வாழ்க்கையில் தொடர்ந்து அழிவை ஏற்படுத்தியது. அது தேவனுடனான மக்களின் உறவையும், மக்களுக்கிடையேயான உறவையும் சேதப்படுத்தியது. அதற்கும் மேலாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்கள் சகித்த அனுதின கஷ்டங்கள் ஆதாம் மற்றும் ஏவாளைப் போலவே, தேவன் தமது மக்களுக்கு தீமைக்கு எதிராக வெற்றியைக் கொடுக்கும் நேரத்திற்காக அவர்கள் காத்திருக்க வேண்டும் என்று மோசேக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் நினைவூட்டியது.

இந்தப் பொருளின் இலக்கிய அமைப்பை மனதில் கொண்டு, இந்த வேத பகுதியின் உண்மையான அர்த்தத்தை நம்மால் ஆராய முடிகிறது. மனுக்குலம் தேவனுடைய தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விபரத்தைக் குறித்து மோசே ஏன் எழுதினார்? வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராய் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும் போது மோசே அவர்களுக்கு என்ன செய்தியை வெளிப்படுத்தினார்?

# உண்மையான அர்த்தம்

இப்போது மிகவும் அடிப்படையான மட்டத்தில் உறுதிப்படுத்த, மோசே அவர் வழிநடத்திய இஸ்ரவேலர்களுக்கு சில பொதுவான இறையியல் கருப்பொருள்களைக் கற்பிப்பதற்காக இந்தக் கதையை எழுதினார். உலகில் பாவத்தின் தோற்றம், இயல்பு மற்றும் விளைவுகள் பற்றி அவர் அவர்களுக்கு நிறைய சொன்னார். மேலும் அவை மிக முக்கிய கருப்பொருள்களாகும். இருப்பினும் நாம் முந்தைய பாடத்தில் பார்த்தபடி தன்னுடைய இந்த ஆதி கால வரலாற்றை மோசே இஸ்ரவேல் மக்களுக்கு வெறுமனே பொதுவான வரலாற்று மற்றும் இறையியல் சிக்கல்களைத் தெரிவிக்க எழுதவில்லை. அதற்கு பதிலாக, மற்ற பல பழங்கால எழுத்தாளர்களைப் போலவே, மோசே தனது ஆதி கால வரலாற்றை தனது மக்களுக்கு தற்போதைய மத மற்றும் சமூக நிகழ்ச்சிகள் பற்றிய நடைமுறை அறிவுறுத்தல்களை, முக்கியமாக, இந்த இடத்தில், எகிப்தை விட்டு கானானுக்குச் செல்வதைக் குறித்து எழுதினார்.

ஆதி காலத்து ஏதேன் தோட்டத்தையும் இஸ்ரவேல் கானானைக் கைப்பற்றுவதையும் மோசே எவ்வாறு தொடர்புடையதாகக் காட்டினார் என்பதைக் காண, அவருடைய கதையின் மூன்று கூறுகளைப் பார்ப்போம்:முதலாவது ஏதேன் தோட்டத்தைப் பற்றி மோசே காட்சிப்படுத்துவது; இரண்டாவது ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்து விசுவாசம் அவசியம் என்பதில் அவரது கவனம்; மூன்றாவதாக ஆதாம் மற்றும் ஏவாளின் மீது கூறப்பட்ட சாபங்கள் பற்றிய அவரது சித்தரிப்பு ஆகியவற்றைப் பார்ப்போம். ஏதேன் தோட்டத்தைப் பற்றிய மோசேயின் விளக்கத்தை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தோட்டம்

நம்முடைய அனேக நவீன கேள்விகளுக்கு எப்போதும் பதில் கிடைக்காதவண்ணம் தோட்டத்தைப் பற்றிய மோசேயின் விளக்கம் மிகவும் சிக்கலானது. இருப்பினும், மோசேயின் விளக்கத்திலுள்ள முக்கியச் சிந்தனைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியும். நாம் பார்க்கும் வண்ணம், ஏதேன் தோட்டத்தை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துடன் அடையாளப்படுத்தி மோசே விவரித்தார். மோசேயின் கண்ணோட்டத்தில் இஸ்ரவேல் மக்களை தன்னுடைய நாட்களில் அவர் நடத்திச் சென்றது உண்மையில் ஆதி காலத்து இடமான ஏதேன் தோட்டத்தை நோக்கியே ஆகும்.

ஆதியாகமம் 2–3 இன் பல அம்சங்கள், இஸ்ரவேல் மக்கள் கானானை ஏதேன் நிலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும் என்று மோசே விரும்பினார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆனால் குறிப்பாக அவரது பதிவின் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை: முதலாவது ஏதேனின் அடையாளம்; இரண்டாவது ஏதேனின் பரிசுத்தம். நாம் முதலில் ஏதேனின் அடையாளத்தைக் குறித்துப் பார்க்கலாம்.

## அடையாளம்

ஆதியாகமம் 2:10-14 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பேர், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்; அவ்விடத்திலே பொன் விளையும்... இரண்டாம் ஆற்றுக்குக் கீகோன் என்று பேர், அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பேர், அது அசீரியாவுக்குக் கிழக்கே ஓடும். நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர் (ஆதியாகமம் 2:10-14).

ஏதேனிலிருந்து ஒரு நதி பாய்ந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று என்று மோசே எழுதினார். இந்த பெரிய ஆறுகள் பைசோன், கீகோன், இதெக்கேல், ஐபிராத்து என்பவை. ஏதேனில் உள்ள ஒரு மத்திய நதி இந்த நான்கு ஆறுகளைப் போஷிக்கிறது. இந்த நதி தான் அவைகளின் மைய ஆதாரமாக இருந்தது.

இப்போது இங்கே மோசேயின் விளக்கத்தை ஆராயும் வேளையில், உலகின் தொடக்கத்திலிருந்து நமது கிரகத்தின் வரலாறு முழுவதும் பல புவியியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மோசேயின் காலத்தில் கூட இந்த நான்கு பெரிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆறுகளைப் போஷித்த ஒரு நதி இருந்ததில்லை. கடைசிக் காலத்தில் மட்டுமே இந்த மத்திய நீராதாரம் தோன்றும் என்று வேதவசனம் போதிக்கிறது. இருப்பினும் இந்த மத்திய ஆதாரத்திலிருந்து போஷிக்கப்படும் இந்த நான்கு ஆறுகளைப்பற்றிய மோசேயின் குறிப்பு ஏதேன் தோட்டம் அமைந்திருந்த மோசேயின் கணிப்பைக் குறித்த ஒரு உத்தேசத்தை நமக்குத் தருகிறது.

2:14 இல் குறிப்பிடப்பட்டுள்ள இதெக்கேல் மற்றும் ஐபிராத்தை நவீன டைக்ரிஸ் மற்றும் யூப்ரடீஸ் நதிகளின் பகுதியுடன் நாம் அடையாளம் காணலாம். இந்த ஆறுகளை ஆதியாகமம் குறிப்பிடுகிறது என்னும் உண்மை, ஏதேன் மெசொப்பொத்தேமியா பகுதியில் இருந்தது என்றும் பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆதியாகமம் பாபிலோனிய புராணங்களுடன் ஒத்துப்போகிறது என்றும் பரிந்துரைத்துள்ளது. பாபிலோனிய மொழியில் எடின் என்ற ”சமவெளி” அல்லது ”திறந்த சமவெளி” என்னும் பதம் இதெக்கேல்-ஐபிராத்து பகுதிகளுக்கு மிகவும் பொருந்தும். ஆனால் எபிரேய மொழியில் ஏதேன் என்பது ”சமவெளி” அல்ல. அதற்கு ”ஒரு இனிமையான அல்லது மகிழ்ச்சியான இடம்” என்று அர்த்தம். எனவே மோசே பாபிலோனிய வார்த்தையைப் பயன்படுத்தவேயில்லை. ஏதேனுக்கு பாபிலோனிய வார்த்தையைப் போல் ஒலித்த ஒரு எபிரேய வார்த்தையை அவர் பயன்படுத்தினார், ஆனால் இந்த இடத்தைப் பற்றிய அவரது அர்த்தம் ஒன்று போல் இல்லை. உண்மையில், ஆதியாகமத்தின் பதிவு ஏதேன் மெசொப்பொத்தேமியாவுக்கு மட்டும் உட்படுத்தப்பட்டதல்ல என்று தெளிவாகக் கூறுகிறது. ஆதியாகமம் 2:10 இல் நாம் பார்த்தது போல இதெக்கேல் மற்றும் ஐபிராத்து ஏதேனில் அமையப்பெற்ற ஒரு பெரிய நதியிலிருந்து பாய்ந்தோடின. வசனம் 10 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று (ஆதியாகமம் 2:10).

இதெக்கேல், ஐபிராத்து ஆகிய ஆறுகளை ஏதேனின் நதி போஷித்தது என்றும் ஏதேன் இதெக்கேல்-ஐபிராத்து பகுதிகளுடன் மட்டும் வரையறுக்கப்படவில்லை என்றும் இந்த வேதபகுதி போதிக்கிறது. ஏதேனின் கிழக்கு எல்லைப்பகுதி குறித்து ஒரு பொதுவான தகவலைக் கொடுப்பதற்கு மோசே இதெக்கேல், ஐபிராத்து ஆறுகளைக் குறிப்பிடுகிறார். கிழக்கிலுள்ள பெரும் நதிகள் ஏதேனின் கிழக்கு எல்லைப்பகுதியை வரையறுத்தன.

இந்தக் கண்ணோட்டம் ஆதியாகமம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற நதிகளின் இருப்பிடங்களால் உறுதி செய்யப்படுகிறது. 2:11, 13 இல் மோசே மற்றொரு ஜோடி நதிகளைக் குறிப்பிட்டார். ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் பைசோன் ஆற்றையும் எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் கீகோன் ஆற்றையும் ஏதேனின் நதி போஷித்தது என்று அவர் எழுதுகிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டில் ஆவிலா மற்றும் கீகோன் நிலப்பகுதிகள் பெரும்பாலும் எகிப்தின் பிராந்தியத்துடன் தொடர்புடையவைகள். பெரும் நதியான நைல் நதியுடன் மோசே இந்த நதிகளை எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதை நாம் உறுதியாகக் கூற முடியாது. ஆனால் அவர் ஏதேனின் மேற்கு எல்லையாக எகிப்தின் வடக்குப் பகுதியை சுட்டிக்காட்டினார் என்று தாராளமாகச் சொல்லலாம்.

எனவே மோசேயின் கண்ணோட்டத்தில் ஏதேன் சிறிய இடம் இல்லை என்று பார்க்கலாம். அது இதெக்கேல் – ஐபிராத்து தொடங்கி எகிப்தின் எல்லை வரை நீளும் ஒரு பெரிய பகுதியாக ஏறக்குறைய எல்லா பகுதிகளையும் சேர்த்து இப்போது நாம் செழிப்பான பிறை என்று அழைக்கும் இடமாகும். ஏதேனின் பரந்த இனிமையான எல்லைக்குள் மையப்பொருளாக ஏதேன் தோட்டம் என்றதொரு விஷேசித்த தோட்டம் இருந்தது.

முதலில் மோசே ஏதேனை செழிப்பான பிறையுடன் அடையாளப்படுத்தியது முக்கியமாகத் தோன்றாமலிருக்கலாம். ஆனால் நிஜத்தில், மோசே ஆதியாகமத்தை எழுதியபோது ஏதேனின் முக்கியத்துவத்தை இஸ்ரவேல் மக்கள் புரிந்து கொள்வது மிக முக்கியமாக இருந்தது. வளமான பிறை என்னும் ஏதேன் தேசமே தேவன் அவர்களுக்கு வாக்களித்தது என்றும், தான் அத்தேசத்திற்கு அவர்களை கூட்டிச்செல்வதாகவும், இதை அவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஆதியாகமத்தின் மற்ற இடங்களில், மோசே ஆதியாகமம் 2 யை மீண்டும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக ஆதியாகமம் 15:18 இல் தேவன் ஆபிரகாமுடன் பேசியதில் இந்தக் கண்ணோட்டம் தெளிவாகிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லைகளைப் பற்றி தேவன் விவரிக்கும் விதத்தை இந்த வேதபகுதியில் கவனியுங்கள்:

> அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, ”எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும் இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்” என்றார் (ஆதியாகமம் 15:18).

ஆபிரகாமின் நிலப்பகுதி இதெக்கேல்-ஐபிராத்து பகுதிக்கு நீட்டிக்கப்படும் என்றும் அது ”எகிப்தின் நதியை” அடையும் என்றும் தேவன் வாக்குத்தத்தம் அளித்ததை ஒருபுறம் நாம் பார்க்கிறோம். ”எகிப்தின் நதி” என்பது நைல் நதியைக் குறிக்காமல், எகிப்தின் சீனாய் எல்லைப் பகுதியில் உள்ள ஒரு சிறிய நதியைக் குறிக்கலாம் என்று பல மொழிபெயர்ப்பாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அனைத்து நிகழ்வுகளிலும், இந்த வசனம் ஆதியாகமம் 2 இல் தோன்றுவதைப் போல ஏதேனின் புவியியல் எல்லைகளைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது. ஆதியாகமம் 2 க்கான இந்தக் குறிப்பு, ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் ஏதேன் தேசம் என்று அறியப்பட்ட தேசத்தை தேவன் வாக்குத்தத்தம் செய்ததாக மோசே நம்பினார் என்பதைத்

தெளிவுபடுத்துகிறது. மோசேயின் கண்ணோட்டத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கானானை நோக்கிப் போகையில் அவர்கள் உண்மையில் ஏதேன் என்னும் ஆதிகால நிலத்தின் இருப்பிடத்தையே நோக்கிச் சென்றனர்.

இஸ்ரவேல் ஏதேனுக்குச் செல்லும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் பொருட்டு மோசே அந்த இடத்தின் பரிசுத்த தன்மையை வலியுறுத்தினார். தேவனுடைய விஷேசித்த பிரசன்னதிற்குள் நுழையும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் இடமே, தான் அவர்களை அழைத்துச் செல்லும் அந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்று அவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஏதேனின் பரிசுத்த தன்மையை அவர் சுட்டிக்காட்டினார்.

## பரிசுத்தம்

மோசே ஏதேனின் பரிசுத்தத்தைத் தெரியப்படுத்திய முதன்மையான வழி ஆசரிப்புக் கூடாரத்தை விவரிக்க அவர் பயன்படுத்திய விதத்தில் அதை விவரிப்பதாகும். பொதுவாக தேவன் எங்கும் நிறைந்திருந்து, எல்லா இடங்களிலும் வாழ்கிறார் என்றாலும், தேவன் விஷேசித்த விதமாக தம் ஜனங்களை சந்திக்க வருவதற்கு மோசே ஒரு கூடாரத்தை உண்டாக்கினார். இந்தக் கூடாரத்தில் தேவன் தம் மகிமையைக் காண்பித்து, தம் பிரமாணங்களை அருளி, தமது ஜனங்களின் ஆராதனையை ஏற்றுக்கொண்டு தமது தயவால் அவர்களை ஆசீர்வதித்தார். எனவே மோசே கூடாரத்தை விவரித்த விதமாய் ஏதேனையும் சித்தரித்த போது, ஏதேன் என்னும் கானான் தான் பூமியில் தேவனுக்குரிய விஷேசித்த ஸ்தலம் என்று வெளிப்படுத்தினார். அங்கே இஸ்ரவேல் மக்கள் தேவனின் பேராசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஆசரிப்புக் கூடாரத்தைப் போலவே ஏதேனின் ஏழு அம்சங்களாவது அது ஒரு விஷேசித்த தேவபிரசன்னத்தின் பரிசுத்த ஸ்தலம் என்று குறிப்பிடுகிறது. முதலில், 3:8 இல் தேவன் ”தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார்” என்று மோசே சொன்னபோது அவர் ஒரு சிறப்பு வெளிப்பாட்டைப் பயன்படுத்தினார். ”உலாவி” என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய பதம் மிட் ஹாலெக் (מִתְהַלֵּךְ) என்பதாகும். இந்தப் பதம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இது லேவியராகமம் 26:12 மற்றும் பிற வேதபகுதிகளில் மோசே கூடாரத்தில் தேவனுடைய பிரசன்னத்தை விவரித்த சிறப்பான வழிகளில் ஒன்றாகும்.

இரண்டாவதாக, 2:9 இல் ஏதேன் தோட்டத்தின் முக்கிய அம்சமாக ஜீவவிருட்சத்தைப் பற்றி வாசிக்கிறோம். இந்த விஷேசித்த மரம் புசிப்பவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் வல்லமையைக் கொண்டிருந்தது. வேதாகமம் இதை வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும் பண்டைய உலகின் பல தளங்களிலுள்ள புனித இடங்களில் ஜீவவிருட்சத்தின் பகட்டான உருவங்களைக் கொண்டிருந்தன என்று சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி குறிப்பிட்டுள்ளது. மோசேயின் ஆசரிப்புக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கூடாரத்தின் ஏழு முனை விளக்குத்தண்டான மெனோரா, அனேகமாக ஜீவவிருட்சத்தின் ஒரு பகட்டான பிரதிநிதித்துவம் என்பதை இந்தச் சான்றுகள் வலுவாகக் கூறுகின்றன. இந்தப்பிரகாரமாக, ஏதேன் தோட்டம் பூமியின் உண்மையான பரிசுத்த ஸ்தலம் எனக் காண்பிக்கப்படுகிறது.

ஏதேனின் புனிதத்தை மோசே குறிப்பிட்ட மூன்றாவது வழி, இப்பகுதியில் தங்கம் மற்றும் கோமேதகக்கல் மீது அவர் கவனம் செலுத்தியது ஆகும். 2:12 இல் தங்கமும் கோமேதகக்கல்லும் ஏதேன் பிராந்தியத்தில் ஏராளமாக இருந்தன என்பதை அறிகிறோம். நாம் எதிர்பார்த்தபடி, யாத்திராகமம் 25–40 தங்கம் மற்றும் கோமேதகக்கல்லை கூடாரக் கட்டுமானத்தின் முக்கிய பாகங்களாகக் குறிப்பிடுகிறது.

ஏதேன் தோட்டத்துக்கும் கூடாரத்துக்கும் இடையிலான நான்காவது தொடர்பு, கேருபீன்கள் அல்லது தூதர்களின் இருப்பு ஆகும். 3:24 இன் படி, தேவன் ஜீவ விருட்சத்தை அடைவதிலிருந்து பாதுகாக்க ஏதேன் தோட்டத்தில் கேருபீனை வைத்தார். இதேபோல், யாத்திராகமம் 25:18 மற்றும் 37:9 போன்ற வேதபகுதிகளில் கூடாரத்தின் அலங்காரங்கள் முழுவதிலும் கேருபீன்கள் காணப்படுகின்றன. இந்த கேருபீன்கள் இஸ்ரவேலுக்கு பரலோகத்தில் உள்ள தேவதூதர்களை மட்டுமல்ல, ஏதேனில் உள்ள பரிசுத்த இடத்தைப் பாதுகாக்கும் தேவதூதர்களையும் நினைவூட்டின.

ஐந்தாவது, ஏதேனின் நுழைவாயில் ”கிழக்கில்”, அதாவது கிழக்குப் பகுதியில் இருந்தது என்று 3:24 இல் வாசிக்கிறோம். யாத்திராகமம் 27:13 மற்றும் பல வேதபகுதிகளின் படி, கூடாரத்தின் பிரதான நுழைவாயிலும் கிழக்கு பக்கத்தில் இருந்தது என்பதை நாம் உணரும் வரை இந்த விஷயம் அற்பமானதாகத் தோன்றலாம். பண்டைய கிழக்கத்திய நாடுகளில் உள்ள பெரும்பாலான கோவில்களின் அமைப்பும் இதுதான். மீண்டும், ஏதேன் தேவனின் பரிசுத்த வாசஸ்தலமாகக் காட்டப்படுகிறது.

ஆறாவது, மோசே ஏதேனில் ஆதாமின் ஊழியத்தைப் பற்றி மற்ற இடங்களில் கூடாரத்தில் லேவியர்களின் ஊழியத்திற்காகப் பயன்படுத்திய சொற்களைக் கொண்டு பேசினார். தோட்டத்தில் ஆதாமின் பொறுப்பை 2:15 இல் மோசே இவ்வாறு விவரித்தார்:

> [கர்த்தர்] மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதியாகமம் 2:15).

இந்த விதிமுறைகள் எண்ணாகமம் 3:7-8 மற்றும் 8:26 ஆகிய பகுதிகளிலும் ஒன்றாகத் தோன்றும். அங்கு, மோசே அதே சொற்களைப் பயன்படுத்தி கூடாரத்தில் லேவியர்களின் வேலையை விவரித்தார். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் ஆசாரியர்களாகப் பணியாற்றினார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏழாவது, சிருஷ்டிப்பின் ஆறு நாட்களுக்குப் பிறகு ஏதேன் தோட்டம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல, சிருஷ்டிப்பின் ஆறு நாட்கள் ஆதியாகமம் 2:1-3 இல் காணப்படும் தேவனுடைய ஓய்வுநாள் அனுசரிப்பில் நிறைவுற்றது. சுவாரஸ்யமாக, யாத்திராகமம் 24:16 மற்றும் அதற்குப் பிந்தைய பகுதிகளின்படி மோசே தேவனுடன் மலையில் ஆறு நாட்கள் செலவழித்தார். தேவன் ஏழாம் நாளில் மோசேக்கு கூடாரத்தைக் கட்டியெழுப்பக் கட்டளையிட்டார்.

ஏதேனின் இந்த ஏழு அம்சங்களும் மோசே ஏதேன் தோட்டத்தை ஆசரிப்புக் கூடாரத்தைப் போலவே ஒரு பரிசுத்த ஸ்தலமாகக் கருதினார் என்பதைக் காட்டுகிறது. அதுவே உலகத்தில் தேவனுடைய விஷேசித்த பிரசன்னத்தின் இடமாயிருந்தது. அந்த இடத்திற்கு அருகில் இருப்பது தேவ ஆசீர்வாதத்திற்கு அருகில் இருப்பது போலாகும்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி கானான் தேசமே ஏதேன் இருந்த இடம் என்று மோசே விசுவாசித்தார். இதன் விளைவாக, ஏதேனின் புனிதத் தன்மையில் கவனம் செலுத்தும் வேளையில் மோசே கானானின் புனிதத் தன்மையின் மீதும் கவனம் செலுத்தினார். கானானுக்கு அருகில் இருப்பது என்பது தேவன் ஆரம்பத்தில் இருந்தே தமது பரிசுத்த வாசஸ்தலமாக நியமித்த இடத்திற்கு அருகில் இருப்பது போலாகும். இந்த வருங்காலப் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்து மோசேயின் போதனையைப் பார்க்க சிறந்த வேதபகுதிகளில் ஒன்று உபாகமம் 12:10-11 ஆகும். அங்கே இந்த வசனங்களை அவர் எழுதினார்:

> நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில் குடியேறும்போதும், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி, உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினால் நீங்கள் சுகமாய் வசிப்பீர்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்; அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசமபாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவர வேண்டும் (உபாகமம் 12:10-11).

இந்த வேதபகுதியில் கானான் தேசத்தைப் பற்றிய மோசேயின் தரிசனத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று வெளிப்படுகிறது. ஒரு நாள் தேவன் நிரந்தரமாக வாசம் செய்யும் ஸ்தலமாக கானான் இருக்கும் என்று அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வலியுறுத்தினார் – அது யேகோவா தேவனுக்கான ஆலயம் ஆகும். இதை உறுதிப்படுத்த மோசேயின் காலத்தில் இருந்த கானான் தேசம் ஆதியில் இருந்த ஏதேனின் வெறும் நிழலாக இருந்தது. எருசலேமில் சாலமோன் தேவாலயத்தைக் கட்டியபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் இன்னும் பாவத்திலிருந்து முழுவதும் மீட்கப்படாமலும் ஆரம்பத்தில் இருந்த பூரணத்திற்கு நிகராய்ச் சீரமைக்கப்படாமலும் இருந்தது. ஆயினும், ஏதேனின் பரிசுத்ததைப் பற்றி மோசே எழுதும் போது, இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் தேசம் ஒரு நாள் எப்படி இருக்கும் என்ற தரிசனத்தை முன்வைத்தார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைய வேண்டுமென்றால் பூமியில் தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் காணப்பட்ட ஏதேனுக்கு அருகில் செல்ல வேண்டும். ஆரம்பத்தில் தேவன் ஆதாம் மற்றும் ஏவாளை அற்புதமான தேவாலயத் தோட்டத்தில் வைத்தது போல, தேவன் இப்போது இஸ்ரவேலை கானானுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். அவர்கள் அந்த தேசத்தில் வாசம் செய்தவுடன், தேவனின் விஷேசித்த பிரசன்னத்தில் வாழக்கூடிய ஆசீர்வாதத்தை தேசம் அனுபவிக்கத் தொடங்கும்.

மோசே ஏதேனில் ஆதாம் மற்றும் ஏவாளின் ஆசீர்வாதங்களை இப்படியாக இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு கிருபை காத்திருந்த தேசத்தில் முன்மாதிரியாக வைத்ததை நாம் பார்த்திருக்கும் வேளையில், ஆதியாகமம் 2–3 இல் இரண்டாவது தலைப்பான ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படிதலுக்கான தேவனின் பரீட்சையைப் பார்க்க வேண்டிய நிலையில் இப்போது நாம் இருக்கிறோம். இது மோசே முன்வைக்கும் விளக்கத்தில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

## உண்மைத்தன்மை

ஏதேன் பற்றிய மோசேயின் கட்டுரைக்கு உண்மைத்தன்மையின் கருப்பொருள் முக்கியமானது. ஏதேன் ஆசீர்வாதம் மிகுந்த இடமாக இருந்தாலும், அது தார்மீக பொறுப்பு தேவைப்படும் இடமுமாகும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரவேலர்கள் செல்லும்போது தேவனுடைய கட்டளைகளுக்கும் விசுவாசமாக இருப்பதை அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்று மோசே விரும்பியதால் இந்த உண்மையை வலியுறுத்தினார்.

மோசே இந்தக் கருத்தை ஏன் வலியுறுத்தினார் என்பதைப் புரிந்து கொள்ள, நாம் ஏதேனில் உண்மைத்தன்மையின் அவசியம் மற்றும் கானானில் உண்மைத்தன்மையின் அவசியம் ஆகிய இரண்டு சிக்கல்களை ஆராய வேண்டும். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளிடம் தேவன் எதிர்பார்த்த உண்மைத்தன்மையை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## ஏதேனில்

தோட்டத்தில் கீழ்ப்படிதலின் நோக்கம் ஆதியாகமம் 2 இன் ஆரம்பத்திலேயே தோன்றி, 2 மற்றும் 3 ஆம் அதிகாரங்கள் முழுவதும் அது மீண்டும் மீண்டுமாக தோன்றுகிறது. மேலும் பல வகைகளில் இது இந்த அதிகாரங்களின் முக்கியக் கருப்பொருளாகும். ஆதியாகமம் 2:16-17 இல் தேவன் ஆதாமின் நம்பகத்தன்மைக்கு சவால் விடுத்த விதத்தைப் பாருங்கள்:

> நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்; ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதியாகமம் 2:16-17).

இப்போது, இந்த குறிப்பிட்ட மரத்திலிருந்து தேவன் ஏன் நம் முதல் பெற்றோரை தடை செய்தார் என்பது முற்றிலும் தெளிவாக இல்லை; எல்லாவற்றிற்கும் மேலாக, நன்மை, தீமை அறிவது என்பது வேதத்தின் மற்ற பகுதிகளில் மதிப்பிடப்படுகிறது. ஆயினும், இந்த நிச்சயமற்ற நிலையிலும், தேவன் ஆதாமும் ஏவாளும் அவருக்கு விசுவாசமாக இருப்பார்களா என்று பரீட்சித்துப் பார்க்கிறார் என்பது தெளிவாகிறது. ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படிந்திருந்தால், அவர்கள் தேவனிடமிருந்து இன்னும் பெரிதான ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்கள் எதிர்ப்பை நிரூபித்தால், அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அனுபவிப்பார்கள். ஏதேன் ஒரு பரிசுத்த இடமாக இருந்தது, அங்கு வாழும் ஜனங்களும் பரிசுத்தமாக இருந்திருக்க வேண்டும்.

## கானானில்

ஏதேன் தோட்டத்தில் சம்பவித்த விசுவாசத்தின் பரீட்ச்சை மீது கவனம் செலுத்துவதன் மூலம், மோசே வாக்குத்தத்த நிலத்தை நோக்கி தான் வழிநடத்திய இஸ்ரவேலர்களுக்கு உண்மைத்தன்மைக்கு இணையான தேவையைக் குறித்து வலியுறுத்தினார். வாக்குத்தத்த நிலத்தை நோக்கி மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்தியபோது, தேவன் அவர்கள் தனக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதை குறித்து அவர் அடிக்கடி அவர்களை எச்சரித்தார். மோசே இந்த விஷயத்தைப் பற்றிய உபதேசத்தை உபாகமத்தின் எட்டாவது அதிகாரத்தில் எளிய விதத்தில் சுருக்கமாகக் கூறினார். இந்த வார்த்தைகளை உபாகமம் 8:1 ல் நாம் வாசிக்கிறோம்:

> நீங்கள் பிழைத்துப் பெருகி, கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே பிரவேசித்து, அதைச் சுதந்தரிக்கும்படி நான் இன்று உங்களுக்கு விதிக்கிற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எல்லாக் கட்டளைகளின்படியும் செய்ய சாவதானமாயிருப்பீர்களாக (உபாகமம் 8:1).

இந்தப் பகுதியிலிருந்து இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்திற்குள் நுழைந்து அதை சுதந்தரித்துக்கொள்ள அவரிடத்தில் விசுவாசமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார் என்பது தெளிவாகிறது. உண்மையில், தேசத்தின் வனாந்தரங்களில் அலைந்து திரிந்தபோது, எவ்வாறு பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று போதிப்பதற்காக இஸ்ரவேலர்களை தேவன் பரீட்சித்தார். உபாகமம் 8:2 இல் நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக (உபாகமம் 8:2).

இதற்கு அப்பாற்பட்டு, இஸ்ரவேல் மக்கள், பரிசுத்த பூமிக்கு வந்தபின், அவர்கள் தேவனிடத்தில் விசுவாசமாக இருக்க வேண்டும் அல்லது அவர்கள் இந்த உரிமையை இழக்க நேரிடும் என்றும் மோசே தெளிவுபடுத்தியுள்ளார். உபாகமம் 8:10-20 இல் அவர் இதைக் கூறின விதத்தைப் பாருங்கள்:

> ஆகையால், நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு… உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வாயானால், நிச்சயமாய் அழிந்துபோவீர்கள் என்று இன்று உங்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கிறேன். உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற்போவதினால், கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்போல நீங்களும் அழிவீர்கள் (உபாகமம் 8:10-20).

ஆதாம் மற்றும் ஏவாளைப் போலவே, இஸ்ரவேலர்களும் தேவனுடைய கட்டளைகளுக்கு எதிராக கலகம் செய்ய வாய்ப்புள்ளது என்பதை மோசே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிந்திருந்தார். இப்படிப்பட்ட போக்குகளின் காரணமாக, கானான் தேசத்தில் வாழ விரும்பும் அனைவருக்கும் தேவனிடத்தில் விசுவாசம் தேவை என்று எச்சரிப்பதற்காக ஆதாம் மற்றும் ஏவாளுக்கு தோட்டத்தில் நடந்த பரிட்சை மீது மோசே கவனம் செலுத்தினார். நிச்சயமாக, தேவனுக்கு இஸ்ரவேல் மக்களிடமிருந்து பரிபூரணம் தேவையில்லை, தேவனுடைய கிருபையால் மட்டுமே எவரும் உண்மையுள்ளவராக இருக்க முடிந்தது. ஆயினும், ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் செய்தது போல், இஸ்ரவேல் மக்களும் தேவனுடைய பிரமாணங்களை வெளிப்படையாக மீறி, அவரிடமிருந்து விலகிப் போவார்களேயானால், வாக்குத்தத்த நிலத்தின் ஆசீர்வாதங்களை அவர்கள் அனுபவிக்க முடியாது. வாக்குத்தத்த நிலத்தை நோக்கி முன்னேறிச்செல்ல மோசே இஸ்ரவேல் மக்களை ஊக்குவித்தபோது, தேசத்தில் வாழ்க்கையின் இந்த அம்சத்தை அவர்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும் என்று அவர் கரிசனையுடையவராயிருந்தார். உபாகமம் 8 இல் காணப்படுகின்ற போதனைகளை மனதில் கொண்டவர்களாக, ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட விசுவாசத்தின் மீது மோசே கவனம் செலுத்தியதின் பிரதான நோக்கத்தை நாம் காணலாம். ஆதாமும் ஏவாளும் செய்ததை மாற்றியமைக்க தேவனுடைய கட்டளைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலம் இஸ்ரவேலர்களை ஊக்கப்படுத்த அவர் இந்த விஷயத்தை வலியுறுத்தினார். ஆதாமும் ஏவாளும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனர் மற்றும் அவர்கள் பாவம் செய்ததால் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். மோசேயினுடைய நாட்களில், இஸ்ரவேல் மக்கள் இன்னும் ஏதேன் தோட்டத்திற்கு வெளியே இருந்தார்கள், ஆனால் தேவன் மீண்டும் அவர்கள் ஏதேனில் நுழையவும், தேவனின் ஆசீர்வாதத்தில் வாழவும் அவர்களைத் தயார் செய்வதற்காகப் பரீட்சித்தார்.

அவர் ஆதாம் மற்றும் ஏவாளின் பூர்வகாலத்தில் நெடுநாட்களுக்கு முன்பதாக என்ன நடந்தது என்பதை மட்டும் இஸ்ரவேல் மக்களுக்கு விளக்கவில்லை, ஏதேன் தோட்டத்தில் நடந்த விசுவாசத்தின் பரீட்ச்சை பற்றியும் மோசே எழுதியதை நாம் காண்கிறோம். அவர் வாழ்ந்த நாட்களில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதையும் விளக்கினார். தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு ஏதேன் தோட்டத்தில் அற்புதமான வாழ்க்கையினுடைய ஆசீர்வாதத்தை வழங்கினார். ஆயினும், ஆதாம் மற்றும் ஏவாளைப் போலவே, அவர்கள் தேவனிடத்தில் விசுவாசமாக இல்லாதவரையில், அவர்களால் இந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியவில்லை. தேவனுடைய கட்டளைகளுக்கு முழுமையாக அர்ப்பணித்த ஒரு பரிசுத்த ஜனங்களாக விசுவாசத்தால் வாழ்வதற்கு இஸ்ரவேல் மக்களை மோசே அழைக்கிறார். அப்பொழுதுதான் அவர்கள் தேசத்திற்குள் நுழைந்து அங்கே சமாதானமாக தங்குவார்கள் என்று நம்ப முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏதேன் நிலத்தையும் கானான் நிலத்தையும் பூமியில் தேவனுடைய ஆசீர்வாதத்தின் இடமாக மோசே எவ்வாறு சித்தரித்தார் என்பதை இதுவரை பார்த்தோம், மேலும் இரு தேசங்களிலும் தங்களுக்குள் வசிப்பவர்களிடமிருந்து விசுவாசமான சேவை எதிர்பார்க்கப்படுகிறது என்ற கருத்தை அவர் எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதையும் நாம் பார்த்தோம். இப்போது நாம் இஸ்ரவேல் மக்களுக்காக ஆதியாகமம் 2 மற்றும் 3 இல் சொல்லப்பட்டுள்ள மூல அர்த்தத்தின் மூன்றாவது பரிமாணமான ஆதாம் மற்றும் ஏவாளின் விசுவாசமின்மையின் விளைவுகள் மீது கவனம் செலுத்தப்போகிறோம்.

## விளைவுகள்

தோட்டத்தில் நடந்த துரோகத்தின் விளைவுகளைப் பற்றிப் பார்ப்பதற்காக, ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்தினுடைய மூன்று முடிவுகளான மரணம், வேதனை மற்றும் விலக்குதல் ஆகியவற்றைப் பார்ப்போம்.

### மரணம்

முதலில், தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பாவத்தின் விளைவாக மரண அச்சுறுத்தல்விடுத்தார் என்று மோசே விளக்கினார். ஆதியாகமம் 2:17 இல் ஆதாமை தேவன் எச்சரித்ததில் இந்த மையக்கருத்து முதலில் தோன்றுகிறது. தேவன் இவ்வாறு கூறினார்:

> “ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்” (ஆதியாகமம் 2:17).

”சாகவே சாவாய்” என்ற வார்த்தைகள் வரவிருக்கும் மரணத்தின் உறுதியைக் குறிக்கும் ஒரு சொற்றொடரை உள்ளடக்கியது. இந்த இலக்கண கட்டுமானமானது மோசேயின் பிரமாணம் மரண தண்டனையைக் குறித்து அச்சுறுத்திய விதத்தைப் போன்றது. மோசேயின் பிரமாணம் கடுமையான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக மரண தண்டனை விதிக்கப்படும் என்று அச்சுறுத்தியபோது, மோசே, ”அவன் சாகவே சாவான்” அல்லது ”அவர்கள் சாகவே சாவார்கள்” என்று அறிவித்தார். இந்த பத்திகளின் சட்டரீதியான சூழலானது இந்த வெளிப்பாடுகள் மரண தண்டனையை அறிவிப்பதற்கான சூத்திர வழிகள் என்று உறுதியாகக் கூறுகிறது. ஆதாமும் ஏவாளும் உடனடியாக சாவார்கள் என்று தேவன் சொல்லவில்லை, ஆனால் மரணம் நிச்சயமாக பாவத்தை பின்தொடரும்.

ஆதாம் மரண தண்டனையின் கீழ் வருவார் என்று ஆதியாகமம் 2:17 இல் ஆதாமுக்கு தேவன் வழங்கிய அச்சுறுத்தலை மேற்கண்ட வெளிச்சத்தில் நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புரிந்துகொள்ளலாம். அவன் மரண ஆக்கினைக்கு உட்படுவான். மரணம் உலகில் எப்படி வந்தது என்பதை விளக்குவதற்காக ஆதாமின் பாவத்தின் விளைவை மோசே நிச்சயமாக எழுதினார், ஆனால் அவருடைய நோக்கம் அவர் எழுதிய இஸ்ரவேலர்களின் அனுபவத்துடன் நேரடியாக தொடர்புடையது. அவர்கள் மரணத்தை நன்கு அறிந்திருந்தனர். மோசேயின் வாசகர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய முதல் தலைமுறையினரில் பெரும்பாலானோர் வனாந்தரத்தில் மரிப்பதைக் கண்டனர், ஏனென்றால் அவர்கள் தேவனுக்கு எதிராக கலகம் செய்தனர். எண்ணாகமம் 26:65 இல் மோசே எழுதியது போல்:

> வனாந்தரத்தில் சாகவே சாவார்கள் என்று கர்த்தர் அவர்களைக் குறித்துச் சொல்லியிருந்தார்; எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் தவிர, வேறொருவரும் அவர்களில் மீதியாயிருக்கவில்லை (எண்ணாகமம் 26:65).

மோசேயின் பிரமாணத்தையும், தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளின் கணக்கையும் குறிப்பிடும் விதமாக ”அவர்கள் சாகவே சாவார்கள்” என்ற மொழியை மீண்டும் நாம் பார்க்கிறோம்.

இந்த வகையில், இஸ்ரவேலர்கள், ஆதாம் மற்றும் ஏவாளின் கதையைக் கேட்டு, வனாந்தரத்தில் நேரிட்ட மரணத்தின் அனுபவத்தை, ஆதாம் மற்றும் ஏவாள் தேவனுடைய கட்டளையை மீறிய சம்பவத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். தோட்டத்தில் தேவனின் கட்டளைக்கு விரோதமான துரோகத்தின் விளைவுகளாக மனிதகுலத்தின் முதல் பெற்றோருக்கு மரண தண்டனை உண்டானது. மோசேயின் காலத்தில் தேவனின் கட்டளைகளுக்கு விரோதமாக கடுமையான துரோகம் செய்த இஸ்ரலவேலர்கள் மீது அதே தண்டனை இன்னும் இருந்து வந்தது.

## வேதனை

ஆதியாகமத்தின் பதிவை நாம் வாசிக்கும்போது, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மரணம் உடனடியாக வரவில்லை என்பது தெளிவாகிறது. தேவன் முதலில் ஆதாமையும் ஏவாளையும் வேதனையின் கீழ் சிறைப்படுத்தினார். ஒருபுறம், இந்த வார்த்தைகளை நாம் ஆதியாகமம் 3:16 இல் வாசிக்கிறோம்:

> அவர் ஸ்திரீயை நோக்கி: “நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்” (ஆதியாகமம் 3:16).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறுபுறம், தேவன் ஆதாமையும் வேதனையுடன் கூடிய வாழ்க்கை வாழும்படியாக சிறுமைப்படுத்தினார். ஆதியாகமம் 3:17 இல் ஆதாமுக்கு சொல்லப்பட்ட இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய் (ஆதியாகமம் 3:17).

தோட்டத்தில் ஏற்பட்ட பாவத்தின் விளைவுகள் பற்றி மோசே சொல்லியிருக்கக்கூடிய அனைத்து விஷயங்களிலும், மனிதனின் வேதனையின் மீதான இந்த இரட்டிப்பான கவனமானது இஸ்ரவேலர்களுக்கு இதை அவர் எழுதியதன் நோக்கத்துடன் நன்றாகப் பொருந்துகிறது. அவர்கள் கானான் நிலத்திற்கு வெளியே இருந்ததால் இங்கு குறிப்பிடப்பட்ட வேதனைகளை அனுபவித்தார்கள். ஆனால் வாக்குத்தத்த நிலத்தில் அவர்களுடைய வாழ்க்கையை மோசே விவரித்த விதத்தைப் பாருங்கள். உதாரணமாக, உபாகமம் 11:10-12 இல் இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> நீ சுதந்தரிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போல் இராது; அங்கே நீ விதையை விதைத்து, கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய். நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம். அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும் (உபாகமம் 11:10-12).

சுருக்கமாகச் சொன்னால், கானானுக்கு வெளியே அவர்கள் அனுபவித்த வேதனைகளுக்கு நிவாரணம் கிடைக்கும் விதமாக மோசே இஸ்ரவேல் மக்களை ஒர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். இதன் விளைவாக, ஆதாம் மற்றும் ஏவாளுக்கு ஏற்பட்ட வேதனையை மோசே எழுதியபோது, வேதனையை ஏற்படுத்தும் துரோகத்தைத் தவிர்க்கவும், தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவும் தனது இஸ்ரவேலர்களாகிய வாசகர்களை அவர் அழைத்தார், அதனால் அவர்கள் கானானுக்குத் திரும்பி, தேவனுடைய ஆசீர்வாதத்தில் வாழ்க்கையின் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## விலக்குதல்

ஆதாம் மற்றும் ஏவாளின் விசுவாசமின்மையின் மூன்றாவது விளைவு 3:22 இல் காணப்படுகிறது. ஆதியாகமம் 3:22 இன் வார்த்தைகளைப் பாருங்கள்:

> பின்பு தேவனாகிய கர்த்தர்: "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான். இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும்" (ஆதியாகமம் 3:22).

இந்த வேத பகுதியானது, ஜீவ விருட்சம் மனிதகுலத்தை "என்றைக்கும் உயிரோடிருக்கச்" செய்ய முடிந்தது என்பதை தெளிவுபடுத்துகிறது. வேதனை மற்றும் மரணத்தைக் குறித்த பிரச்சனைக்கு இது முடிவான பதில் ஆகும். ஆயினும், ஆதாமும் ஏவாளும் இந்த நேரத்தில் அதை புசிப்பதை தேவன் விரும்பவில்லை. அவர்கள் தோட்டம் மற்றும் ஜீவ விருட்சத்திலிருந்து விலக்கப்பட்டனர். மனிதகுலமானது ஜீவ விருட்சத்தை அடைவதை அது என்றென்றுமாக தடைசெய்யவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியது அவசியமானது. தேவனிடத்தில் விசுவாசமாய் இருப்பவர்கள் முடிவில் இந்த விருட்சத்திலிருந்து புசிக்க முடியும் என்பதை வேதத்தின் மற்ற பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன. வெளிப்படுத்தல் 2:7 இல் ஜீவ விருட்சத்தைப் பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் கூறினதைப் பாருங்கள்:

> ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது (வெளிப்படுத்தின விசேஷம் 2:7).

கிறிஸ்து பூமிக்குத் திரும்பும் காலத்தின் முடிவைப் பற்றி இப்போது யோவான் பேசினார். ஆனாலும், இந்த விருட்சத்தைப் பற்றி மோசே ஏன் இஸ்ரவேல் மக்களுக்கு எழுதினார் என்பதை அவருடைய வார்த்தைகள் விளக்குகின்றன. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, தேவன் ஜீவ விருட்சத்திற்குச் செல்லும் வழியைத் தடை செய்து போட்டார், ஆனால் மோசேயின் நாட்களில், இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திற்குத் திரும்பியபோது, தேவன் வாழ்வின் ஆசீர்வாதத்தை முன்கூட்டியே ருசித்துப் பார்ப்பதற்குரிய ஒரு வழியை தேவன் திறந்து வைத்தார். உபாகமம் 30:19-20 இல் மோசே இதைக் கூறின விதத்தைப் பாருங்கள்:

> நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக. அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான் (உபாகமம் 30:19-20).

இஸ்ரவேலர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் கானான் தேசத்தில் நீண்ட ஆயுளையும் மகிழ்ச்சியையும் பெற வாய்ப்பு கிடைக்கும். ஆதாமும் ஏவாளும் ஜீவ விருட்சத்தை அடையும் வாய்ப்பை இழந்ததைப் போல, மோசேயின் நாளில், தேவன் இஸ்ரவேலர்களுக்கு அங்கு கிடைத்த வாழ்க்கையின் ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியை மட்டுமே முன்கூட்டியே ருசித்துப் பார்க்கும் வாய்ப்பை வழங்கினார். வாழ்க்கையின் இந்த அனுபவமானது கிறிஸ்து திரும்பி வரும்போது கிடைக்கப்போவதான நமக்குத் தெரிந்த நித்திய வாழ்க்கையின் முழு அளவீடு அல்ல. ஆனாலும், அது கிறிஸ்துவில் என்ன வரப்போகிறது என்பதற்கான ஒரு பகுதி முன்னறிவிப்பாக இருந்திருக்கும். வாக்குத்தத்த நிலத்தில் நீண்ட ஆயுளின் ஆசீர்வாதத்தை அனுபவிக்கும் வாய்ப்பை மோசே இஸ்ரவேல் மக்களுக்கு வழங்கினார்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளுடைய மீறுதலின் கதையானது உலகில் பாவத்தின் தோற்றம் பற்றிய கணக்கை விட அதிகம் என்பதை நாம் பார்த்தோம். ஏதேன் மற்றும் கானானுக்கு இடையேயான தொடர்புகளைப் பெறுவதன் மூலம், மோசே தனது இஸ்ரவேலின் வாசகர்களுக்கு அவர்களின் சொந்த வாழ்க்கையைப் பற்றியும் கற்றுக்கொடுத்தார். வாக்குத்தத்த நிலம் அவர்களுக்கு எவ்வளவு அற்புதமானது என்பதை அவர்கள் கற்றுக்கொண்டார்கள்.

இப்போது நாம் இலக்கிய அமைப்பு மற்றும் ஆதியாகமம் 2–3 இன் மூல அர்த்தத்தைப் பார்த்திருக்கிறோம், நாம் மூன்றாவது கேள்வியைக் கேட்கத் தயாராக இருக்கிறோம். இந்தப் பத்தியை இன்றைய நாளில் பயன்படுத்த புதிய ஏற்பாடு எவ்வாறு நமக்குக் கற்பிக்கிறது?

# நவீன பயன்பாடு

ஆதாம் மற்றும் ஏவாள் செய்த தவறுகளைத் தவிர்க்கவும், மற்றும் கானானுக்குள் நுழைவதன் மூலம் மீண்டும் பரதீசுக்கு செல்லும்படியாகவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசே தனது இஸ்ரவேல் வாசகர்களை ஊக்குவிப்பதற்காக இந்த வேத பகுதியை எழுதினார் என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கான இந்த அறிவுறுத்தல்கள் இன்று நம்முடன் செய்ய வேண்டியதென்ன? எளிமையாகச் சொல்லவேண்டுமானால், தோட்டத்தில் உண்டான பாவத்தின் கதையைப் பயன்படுத்தி இஸ்ரவேல் மக்கள் ஆதாமின் நிலையைத் திரும்பப் பெறவும், மீண்டும் பரதீசில் வாழும்படியான இரட்சிப்பைக் கண்டுபிடிக்கவும் மோசே ஊக்குவித்தார், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் கிறிஸ்துவிற்குள்ளான இரட்சிப்பு என்பதும் பரதீசுக்கு திரும்புவது ஆகும் என்று போதிக்கின்றனர். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று கட்டங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் புதிய ஏற்பாட்டில் ஆதியாகமம் 2–3 இன் பயன்பாடு என்ன என்பது பற்றி நம் வழக்கமான பாணியில் ஆராய்வோம். கிறிஸ்துவின் முதல் வருகையில் ராஜ்யத்தின் துவக்கத்திற்கு இந்த பத்தி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்ப்பதன் மூலம் தொடங்குவோம், பின்னர் அது இன்று தேவனுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியில் நம் வாழ்க்கையுடன் எவ்வாறு பேசுகிறது என்பதைப் பார்ப்போம். இறுதியாக, புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் எல்லாவற்றிற்குமான முடிவு பற்றி போதிப்பதன் வாயிலாக இந்தப் பத்தியின் மீது கவனம் செலுத்துவதைக் காண்போம். ராஜ்யத்தின் தொடக்கத்தை முதலில் பார்ப்போம்.

## தொடக்கம்

ஒரு வழியில், கிறிஸ்து உலகிற்கு கொண்டுவரும் இரட்சிப்பைப் பற்றி புதிய ஏற்பாடு பேசுவது அவருடைய பூமிக்குரிய ஊழியமாகும். ராஜ்யத்தின் துவக்கத்தில், ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் செய்ததை கிறிஸ்து திரும்பப் பெறவும் அதை மாற்றியமைக்கவும் செய்தார். கிறிஸ்து தனது பூமிக்குரிய ஊழியத்தில், ஆதாமும் ஏவாளும் தோல்வியடைந்த தேவனின் கட்டளைகளை நிறைவேற்றினார். புதிய ஏற்பாட்டுப் போதனையின் இந்த அம்சமானது முதலாவதாக பவுலின் நிருபங்களில் எப்படித் தோன்றுகிறது என்பதையும், இரண்டாவதாக, மத்தேயு நற்செய்தியில் எப்படித் தோன்றுகிறது என்பதையும் பார்ப்போம். பவுலின் கண்ணோட்டத்துடன் ஆரம்பிப்போம்.

### பவுல்

பவுல் ரோமர் 5:14 இல் பவுல் எளிய விதத்தில் தனது பார்வையை சுருக்கமாகக் கூறியிருக்கிறார். அங்கே அவர் இவ்வாறு எழுதினார்:

> அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன் (ரோமர் 5:14).

ஆதாம் வரப்போகிறவரின் ஒரு முன்னடையாளம் என்று பவுல் கூறினதைக் கவனிக்கவும். ரோமர் 5 இன் மீதமுள்ள வசனங்கள் ”வரப்போகிறவர்” கிறிஸ்து என்பதை தெளிவுபடுத்துகிறது. ரோமர் 5:18-19 இல் பவுல் இந்த விஷயத்தை சுருக்கமாகக் கூறும் விதத்தைப் பாருங்கள்:

> ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள் (ரோமர் 5:18-19).

பவுல் அதை எப்படி இங்கே கூறினார் என்பதைப் பாருங்கள். ஆதாமின் ஒரு மீறுதலானது எல்லா மக்கள் மீதும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பை விளைவித்தது, ஆனால் கிறிஸ்துவினுடைய ஒரு நீதியின் செயல் எல்லா மனிதர்களுக்குமாக நியாயப்படுத்தப்பட்டது. இது ஏன்? ஆதாம் என்ற ஒரே மனிதனின் கீழ்ப்படியாமை நம்மை பாவிகளாக்கியது. ஆனால் கிறிஸ்து என்ற ஒரே மனிதனின் கீழ்ப்படிதல் நம்மை நீதிமான்களாக்கியது. இந்த போதனை பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆதியாகமம் 2–3 இல் மோசே கற்பித்தபடி, ஆதாம் ஒரு மனிதன் மட்டுமே, ஆனால் அவனது கிரியைகள் அவனுடன் அடையாளம் காணப்பட்ட அனைவருக்கும் விளைவுகளை ஏற்படுத்தின. ஆதாமினுடைய பாவம் முழு மனித இனத்திற்கும் மரணத்தை கொண்டு வந்தது, ஏனென்றால் அவன் தேவனுக்கு முன்பாக நம்முடைய மத்தியஸ்தனாக அல்லது உடன்படிக்கை பிரதிநிதியாக காணப்பட்டார். ஆதாமினுடைய பாவத்தின் விளைவாக, நாம் அனைவரும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் பரதீசுக்கு வெளியே மற்றும் மரணத்தினுடைய சாபத்தின் கீழாகப் பிறந்தோம். ஆனால் அதே சமயத்தில், கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட அனைவருடைய மத்தியஸ்தர் அல்லது உடன்படிக்கை பிரதிநிதி கிறிஸ்து என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. ஆதாமின் கீழ்ப்படியாமைக்கு மாறாக, தேவனிடத்தில் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலானது அவருக்குள் எண்ணப்படுகிற அனைவருக்கும் நீதியையும் ஜீவனையும் கொண்டுவருகிறது. இந்த போதனையிலிருந்து ஆதாமின் பாவத்தின் கதையை நம்முடைய வாழ்வில் பயன்படுத்துவதில் மிக முக்கியமான ஒன்றைக் கற்றுக்கொள்கிறோம். இழந்துபோன பரதீசை மீண்டுமாக கண்டுகொள்வதற்கு ஒரே வழி, கிறிஸ்துவினுடைய நீதியான கீழ்ப்படிதலே. தேவனின் முன் நம் சொந்த தகுதியில் நிற்கும் நபர்களாக நாம் இரட்சிப்பின் பரதீசில் நுழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முடியாது. நமக்கு முன் பரதீசில் நுழைவதற்கு நமக்கு ஒரு சரியான பூரணமான பிரதிநிதி தேவை, கிறிஸ்துவே அந்த பிரதிநிதி. கிறிஸ்து பிதாவுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததால் மட்டுமே தேவனின் சமூகத்தில் நித்திய ஜீவனுக்கேதுவான இரட்சிப்பை நாம் கண்டுகொள்கிறோம். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தில், இயேசு பரதீசில் நுழைவதற்கான உரிமையைப் பெற்றார், மேலும் அவரிடம் விசுவாசம் வைப்பவர்கள் மட்டுமே அவருடன் சேர்ந்து நுழைய முடியும்.

ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே காணப்படுவதாக பவுல் கூறும் தொடர்பானது மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களாலும் பகிரப்பட்டது. இந்த மையக்கருத்து மத்தேயு சுவிசேஷத்தில் எவ்வாறு தோன்றுகிறது என்பதைக் கருத்தில் கொள்வோம்.

## மத்தேயு

மத்தேயு குறிப்பாக மத்தேயு 4:1-11 இல் கிறிஸ்துவுக்கு நேரிட்ட சோதனையின் கணக்கின் வாயிலாக ஆதாமின் பாவத்தை கிறிஸ்து திரும்பப் பெற்று, மாற்றியமைத்த வழிக்கு நேராக கவனத்தைச் செலுத்துகிறார் (இதற்கு இணையான பகுதியானது லூக்கா 4:1-13 இல் காணப்படுகிறது). பல்வேறு வழிகளில், கிறிஸ்துவின் சோதனையின் கதையானது ஆதாம் மற்றும் ஏவாள் தோட்டத்தில் பெற்ற அனுபவத்திற்கும், ஆதாம் மற்றும் ஏவாளைப் பற்றி எழுதியபோது மோசே இஸ்ரவேலர்களுக்கு முன்வைத்த சவாலுக்கும் இணையானது. முதலாவதாக, கிறிஸ்துவின் சோதனை நடைபெற்ற இடமானது இஸ்ரவேலர்கள் மோசேயைப் பின்தொடர்வதால் அதை இஸ்ரவேல் மக்களுடன் இணைக்கிறது. மத்தேயு 4:1 இன் படி, இஸ்ரவேல் மக்கள் தேவனால் வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டதுபோல, இயேசுவானவர் ஆவியானவரால் வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டார். இஸ்ரவேல் தேசம் கீழ்ப்படிவாளா என்று தேவன் வனாந்தரத்தில் சோதித்தார், கிறிஸ்துவும் வனாந்தரத்தில்தான் சோதிக்கப்பட்டார்.

இரண்டாவதாக, இயேசு வனாந்தரத்தில் செலவழித்த காலமானது இஸ்ரவேல் தேசத்தின் அனுபவத்திற்கு இணையானது. மத்தேயு 4:2 இன் படி இஸ்ரவேல் தேசம் நாற்பது ஆண்டுகள் வனாந்திரத்தில் இருந்ததைப் போலவே, கிறிஸ்து நாற்பது நாட்கள் வனாந்தரத்தில் இருந்தார்.

மூன்றாவதாக, கிறிஸ்துவின் சோதனையில் பசி ஒரு முக்கிய அம்சமாகும். மத்தேயு 4:3 இல் சாத்தான் கிறிஸ்துவை கற்களை அப்பங்களாக மாற்றும்படித் தூண்டினான். கிறிஸ்துவின் சோதனையின் இந்த பரிமாணம் வனாந்தரத்தில் தண்ணீர் மற்றும் உணவு மீதான இஸ்ரவேல் மக்களின் சோதனைக்கு இணையாக இருந்தது.

நான்காவதாக, இயேசுவே தனது அனுபவத்தை இஸ்ரவேல் மக்களின் வனாந்தரத்திர சோதனையுடன் வேதத்தை அவர் பயன்படுத்திய வழிகளின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாயிலாக தொடர்புபடுத்தினார். மத்தேயு 4:4 இல் இயேசு உபாகமம் 8:3 யை மேற்கோள் காட்டினார். மத்தேயு 4:7 இல் அவர் உபாகமம் 6:16 யை மேற்கோள் காட்டினார், மத்தேயு 4:10 இல் அவர் உபாகமம் 6:13 யைக் குறிப்பிட்டுள்ளார். இந்த பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் உபாகமத்தின் பகுதிகளிலிருந்து வருகின்றன, அங்கே மோசே வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் சோதனையை விவரித்தார். இந்த பத்திகளை மேற்கோள் காட்டுவதன் மூலம், இயேசு தனது சோதனையின் அனுபவத்தை இஸ்ரவேல் தேசத்தின் சோதனை அனுபவத்துடன் நேரடியாக தொடர்புபடுத்தினார். எனவே இயேசுவின் சோதனையைப் பற்றிய மத்தேயுவின் கணக்கானது மோசே முதலில் இஸ்ரவேல் மக்களுக்கு ஆதியாகமம் 2–3 மூலம் அளித்த செய்தியுடன் தொடர்புபடுத்துகிறது. ஆதாமும் இஸ்ரவேல் மக்களும் தோல்வியடைந்த இடத்தில் இயேசு தனது உற்சாகம் நிறைந்த கீழ்ப்படிதலின் மூலம் ஜெயம் பெற்றார். கிறிஸ்து தேவனின் கட்டளைகளுக்கு விசுவாசமுள்ளவராக இருந்தார். இதனால்தான் லூக்கா 23:43 இல் காணப்படும் நன்கு அறியப்பட்ட வார்த்தைகளை இயேசு கூறினார். கானான் என்னும் பரதீசுக்குள் நுழைவதற்கு அவளை தயார்படுத்துவதற்காக இஸ்ரவேல் தேசம் வனாந்தரத்தில் தன் சோதனைகளை எதிர்கொண்டது போலவே, லூக்கா 23:43 சிலுவையில் இயேசு மனந்திரும்பிய கள்ளனிடம் இந்த வார்த்தைகளை கூறினார்:

> இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 23:43).

கிறிஸ்துவின் நீதிக்கான வெகுமதி பரதீசில் நித்திய ஜீவன் ஆகும்.

எனவே புதிய ஏற்பாடானது ஆதாம் மற்றும் ஏவாளின் சோதனையுடனும், வனாந்தரத்தில் இஸ்ரவேலின் சோதனையுடனும், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தில் ராஜ்யத்தின் துவக்கத்தைத் தொடர்புபடுத்துகிறது என்று பார்க்கிறோம். முதல் ஆதாம் தோல்வியடைந்த இடத்தில், ஜெயம் பெற்ற கடைசி ஆதாம் கிறிஸ்து ஆவார். மேலும், கிறிஸ்து வனாந்தரத்தில் சோதனையை வென்று, இஸ்ரவேல் மக்களின் தோல்வியை மாற்றினார். இந்த காரணத்திற்காக, அவர் நித்திய பரதீசில் நுழைந்தார்.

தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளைக் குறித்த மோசேயின் கணக்கை கிறிஸ்துவின் முதல் வருகையுடன் புதிய ஏற்பாடு எவ்வாறு தொடர்புபடுத்துகிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், நாம் நமது இரண்டாவது கரிசனத்திற்கு செல்ல வேண்டும்: நாம் வாழும் இன்றைய நாட்களுடன் புதிய ஏற்பாடு இந்த கொள்கைகளை ராஜ்யத்தின் தொடர்ச்சிக்கு எவ்வாறு பொருத்துகிறது?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தொடர்ச்சி

புதிய ஏற்பாட்டில் பல வேத பகுதிகள் இந்த விஷயத்தில் தனித்து நிற்கின்றன. ஆனால் நாம் இரண்டை மட்டுமே பார்ப்போம்: முதலில், ஆதியாகமத்தின் இந்த அத்தியாயங்களில் பவுல் செலுத்தும் கவனம், இரண்டாவதாக, யாக்கோபு இந்த பிரச்சனைகளைப் பற்றி எழுதிய விதம்.

## பவுல்

2 கொரிந்தியர் 11:3 இல் உள்ள பவுலின் வார்த்தைகளை முதலில் பார்ப்போம்:

> ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன் (2 கொரிந்தியர் 11:3).

இந்த அதிகாரத்தில் பவுல் தொடர்ந்து சொல்லும்போது, கொரிந்தியர்கள் வேறு நற்செய்திக்கு திரும்புவதைக் குறித்து அவர் மிகுந்த கவனமுடையவராய் இருந்தார் என்று விளக்கினார். கிறிஸ்துவின் உண்மையான சுவிஷேசத்திலிருந்து விலகி – மோசமான விசுவாசமின்மைக்கு எதிராக எச்சரிக்கை செய்ய ஏவாளின் எதிர்மறை உதாரணத்தைக் கொண்டு பவுல் முறையிட்டதை நாம் இங்கு பார்க்கிறோம். வாக்குத்தத்த நிலத்தை நோக்கி இஸ்ரவேல் மக்கள் உண்மையுள்ளவர்களாக கடந்துசெல்லும்படி எச்சரிக்கும் விதமாக மோசே ஏவாளினுடைய சோதனையின் கதையைப் பயன்படுத்தியதைப் போலவே, பவுலும் கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவருக்கும் தேவையான அடிப்படை விசுவாசத்தைப் பற்றி தான் வாழ்ந்த நாட்களில் விசுவாசிகளை எச்சரிக்க அதே கதையைப் பயன்படுத்தினார். ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது, காணக்கூடிய சபையில் உள்ள பலர் சுவிஷேசத்தின் அத்தியாவசிய சத்தியங்களிலிருந்து விலகும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர். ஆதாம் மற்றும் ஏவாளுக்கு நேரிட்ட விளைவுகளைப் போலவே பயங்கரமானது என்பதால் சபையானது வழிவிலகி பின்மாற்றம் அடைவதற்கு எதிராக மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

## யாக்கோபு

கிறிஸ்தவ வாழ்க்கையில் வருகின்ற பரிட்சைகள் மற்றும் சோதனைகளின் பங்கை விளக்கியதால் யாக்கோபு, பவுல் கூறியதைப் போன்ற நிலைபாட்டை எடுத்துக் கொண்டார். யாக்கோபு 1:12-15 இல் நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்… அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக்கோபு 1:12-15).

ஆதியாகமம் 2–3 யை யாக்கோபு குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. 1:14 இல் பாவத்தைத் தூண்டுவதற்கான வல்லமையுடையதான மனிதனின் ”இச்சை” மீது அவர் கவனம் செலுத்தினார், மேலும் நன்மை மற்றும் தீமை அறியத்தக்கதான விருட்ச்சத்திற்காக ஏவாள் கொண்டிருந்த விருப்பம் தான் அவளை பாவம் செய்ய வைத்தது. இரண்டாவதாக, இந்த பரீட்ச்சையில் வெற்றி பெறுபவர்கள் ”ஜீவ கிரீடத்தைப் பெறுவார்கள்” என்று யாக்கோபு விளக்கினார். மாறாக, பாவத்தின் விளைவு என்பது “அது மரணத்தை பிறப்பிக்கிறது.” ஆதாம் மற்றும் ஏவாளின் கதையில் காணப்படும் ஜீவனுக்கும் மரணத்திற்கும் இடையே உள்ள வேறுபாடானது இங்கே சொல்லப்பட்டுள்ள ஜீவனுக்கும் மரணத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையாகிறது. மற்றும் மோசே இஸ்ரவேல் மக்களை வனாந்திரத்தில் நேரிடும் சோதனைகளின் மத்தியில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கும்படி ஆதாம் ஏவாளுக்கு நேரிட்ட சோதனையை எடுத்துக்கூறி ஊக்குவித்தது போல், பவுல் மற்றும் யாக்கோபு ராஜ்யத்தின் தொடர்ச்சியில் நேரிடுகின்ற சோதனைகளின் போது உறுதியுடையவர்காளாய் இருக்க நம்மை ஊக்குவித்தனர். கிறிஸ்தவ வாழ்க்கையின் போது சோதனைகள் நம் உண்மையான குணத்தை வெளிப்படுத்துகின்றன மற்றும் நித்திய ஜீவனுக்கு நம்மை தயார்படுத்துகின்றன. தேவனின் கிருபையால், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருக்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும், இதனால் நாம் பரதீசில் நித்திய ஜீவனை பரிசாகப் பெற்று கனப்படுத்தப்படுவோம்.

புதிய ஏற்பாடானது, தோட்டத்தில் சம்பவித்த ஆதாம் மற்றும் ஏவாளின் கதையை இராஜ்ஜியத்தின் துவக்கத்திற்கும் அதன் தொடர்ச்சிக்கும் எப்படிப் பயன்படுத்துகிறது என்பதைப் பார்த்த நாம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பின் எல்லாவற்றிற்குமான முடிவாகிய, இறுதி நிலையின் மீது கவனம் செலுத்த வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ராஜ்யத்தின் நிறைவு

இந்த கருப்பொருள் புதிய ஏற்பாட்டில் பல இடங்களிலும் தோன்றுகிறது, ஆனால் நாம் இரண்டு பத்திகளை மட்டுமே பார்ப்போம்: ஒன்று ரோமர் புத்தகத்திலும், மற்றொன்று வெளிப்படுத்தல் புத்தகத்திலும் காணப்படுகிறது.

## ரோமர்

முதலில், பவுல் ரோமாபுரியில் உள்ளவர்களுக்கு நிருபங்களை எழுதி முடிக்கிற வேளையில் ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளுக்கு பவுல் நம்பிக்கை கொடுத்த விதத்தைப் பாருங்கள். ரோமர் 16:20 இல் அவர் இந்த வார்த்தைகளை எழுதினார்:

> சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென் (ரோமர் 16:20).

இந்த வார்த்தைகளில், கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைக் குறித்து ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த பெரும் நம்பிக்கையை பவுல் நினைவுபடுத்தினார். ஆனால் அவர் ஆதியாகமம் 3 இல் சொல்லப்பட்டுள்ள இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அவ்வாறு செய்தார். இந்த பாடத்தில் நாம் முன்பு பார்த்தது போல், ஆதியாகமம் 3:15 இல் தேவன் சர்ப்பத்திடம், ஒரு நாள் மனித குலமாகிய, ஏவாளின் வித்து, சர்ப்பத்தினுடைய வித்தின் தலையை நசுக்கும் என்று கூறினார். கிறிஸ்து திரும்பி வரும்போது சாத்தான் கிறிஸ்தவர்களின் காலடியில் நசுக்கப்படுவான் என்று இந்த பத்தியில் பவுல் கூறினார். கிறிஸ்துவே சாத்தானையும் நமது வலிமையான எதிரியாகிய மரணத்தையும் அழிப்பார். பின்னர் நாம் கிறிஸ்துவுடன் வெற்றி சிறந்து மகிமையில் ஆட்சி செய்வோம்.

## வெளிப்படுத்தின விசேஷம்

புதிய ஏற்பாட்டில் ஆதியாகமம் 2–3 இன் கருப்பொருள்கள் ராஜ்யத்தின் எல்லாவற்றிற்குமான முடிவுடன் தொடர்புடையவையாக காணப்படுவது வெளிப்படுத்துதல் புத்தகத்தில் ஆகும். யோவான் இந்த புத்தகத்தில் பல சந்தர்ப்பங்களில் ஜீவ விருட்சத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வெளிப்படுத்துதல் 2:7 இல் யோவான் இந்த விஷயத்தைக் கூறின விதத்தைப் பாருங்கள்:

> ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது (வெளிப்படுத்தின விசேஷம் 2:7).

ஆதியாகமம் 3 பற்றிய குறிப்பு இங்கே தெளிவாக உள்ளது. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்பது அவர்கள் ஜீவ விருட்ச்சத்திலிருந்து புசிப்பதைத் தவிர்ப்பதற்காக என்று நமக்குத் தெரியும். ஆயினும், கிறிஸ்து திரும்பி வரும்போது, தேவன் அவருடைய ஜனங்களுக்கு ஜீவ விருட்சத்திலிருந்து புசிக்கும் உரிமையை வழங்குவார். இந்த விருட்சம் அமைந்துள்ள இடத்தையும் கவனிக்கவும். அது "தேவனுடைய பரதீசுவில்" இருக்கிறது என்று யோவான் வெளிப்படையாக கூறினார். நீடித்த ஆயுளைக் காணலாம் என்பதால், கானானுக்குள் நுழைய இஸ்ரவேல் மக்களை மோசே அழைத்ததைப் போல, கிறிஸ்தவர்கள் அவர்கள் நம்புவதைப் போல இதிலும் பெரிய, முழுமையாக மீட்டெடுக்கப்பட்ட பரதீசில் நுழைவார்கள்.

மூன்றாவது இடத்தில், இந்த விருட்சத்திலிருந்து புசிப்போர் யார் என்று அடையாளம் காண்பதில் ஆதியாகமத்துடன் மற்றொரு தொடர்பைக் காண்கிறோம். யோவான், "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு" உரிமை வழங்கப்படும் என்று கூறினார். தேவனிடத்தில் விசுவாசமாக இருப்பதற்கு இஸ்ரவேல் மக்களை ஊக்குவிப்பதற்காக மோசே ஜீவ விருட்சத்தைப் பற்றி பேசியது போலவே,, விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருந்து, பாவத்தை ஜெயிக்கிறவர்கள் மட்டுமே ஜீவ விருட்சத்திலிருந்து புசிக்க முடியும் என்பதை யோவான் விளக்கினார்.

இறுதியாக, நாம் வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2 யைப் பார்க்க வேண்டும். யோவான் புதிய உலகத்தை எதிர்நோக்கியபோது, அவர் பார்த்தது இதுதான்:

> பின்பு, பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் (வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2).

புதிய ஏற்பாட்டின் முன்னோக்கு தெளிவானது. கிறிஸ்து தனது ராஜ்யத்தை நிறைவு செய்யத் திரும்பும்போது, கிறிஸ்துவை நம்புகிறவர்கள் ஏதேனின் பரதீசில் நுழைவார்கள். சாத்தான் நம் கால்களின் கீழ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நசுக்கப்படுவான், நாம் ஜீவ விருட்சத்திலிருந்து உண்டு தேவனின் புதிய சிருஷ்டிப்பில் என்றென்றும் வாழ்வோம்.

# முடிவுரை

இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கிச் சென்றபோது அவர்களுக்கு உதவுவதற்காக தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் இருந்த காரியங்களைப் பற்றி மோசே எழுதியதை இந்தப் பாடத்தில் பார்த்தோம். ஏதேன் தோட்டத்தில் நடந்த நிகழ்வுகளை மீண்டும் கட்டவும், தலைகீழாக மாற்றவும் அவர் தேசத்தை அழைத்தார். பல விஷயங்களில், இந்த வேத பகுதியின் செய்தி இன்று நம்முடன் மிகவும் ஒத்திருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி முன்னேற இஸ்ரவேலுக்கான மோசேயின் அழைப்பைக் கேட்பதன் மூலம், நாமும் ஆதாம் மற்றும் ஏவாளின் பாதைகளை பின்தொடர வேண்டும் என்பதைக் காணலாம். கிறிஸ்துவிடம் நம்பிக்கை வைத்து விசுவாசமாக இருப்பதன் மூலம், பரலோகத்தின் இரட்சிப்பை, தொலைந்து கண்டெடுக்கப்பட்டதாக நாம் கண்டுபிடிப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.